மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
அ.வ.எண். 72/2014

பெயர் : சுகவர்ணன்
சாட்சி – பி.வா.சா–3 நாள்: 17.09.2025

---

**குறுக்கு விசாரணை (வாதிகள் தரப்பு)**

1. இந்த வழக்கில் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை நான் படித்துப் பார்த்துள்ளேன். தாவா சொத்தான க.ச.821/3 காலையில் 4.04 ஏக்கர் பரப்பளவு பூமியை அருணாச்சல கவுண்டர் வா.சா.ஆ.1 ன் படி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். க.ச.821/2 காலையில் 3.58 ஏக்கர் பரப்பளவு பூமியை அருணாச்சல கவுண்டர் வா.சா.ஆ.2 ன் படி கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களையும் அருணாச்சல கவுண்டர் அவரது தனிப்பட்ட முறையில் கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான்.

2. அருணாச்சல கவுண்டருக்கு, முதலாம் வாதி சுப்பராய கவுண்டர் மற்றும் முதல் பிரதிவாதி ராமசாமி கவுண்டர் ஆகிய இருவரும் ஆண் மக்கள் என்றால் சரிதான். கடந்த 07.05.1965 தேதியில் அருணாச்சல கவுண்டரும், அவரது மகன்களான ஒன்றாம் வாதி மற்றும் ஒன்றாம் பிரதிவாதி மூவரும் பாகப்பிரிவினை வா.சா.ஆ.4 ஆவணம் மூலம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் மூலம் அருணாச்சல கவுண்டர் வாங்கிய சொத்திற்கு அவரது பெயருக்கு வா.சா.ஆ.3 பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்கள் மூலம் அருணாச்சல கவுண்டர் வாங்கிய சொத்துக்கள் ஆன க.ச.821/3 மற்றும் க.ச.821/2 காலைகளும் வா.சா.ஆ.4 பாகப்பிரிவினையில் சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அருணாச்சல கவுண்டர் 1981 ஆம் ஆண்டு வரை உயிருடன் இருந்தார் என்றால் சரிதான். அருணாச்சல கவுண்டர் உயிருடன் இருந்தவரை மேற்படி க.ச.821/3 மற்றும் க.ச.821/2 காலைகளையும் குறிப்பிட்டு எந்த ஆவணமும் அவர் எழுதி வைக்கவில்லை என்றால் சரியல்ல. அவர் எழுதி வைத்துள்ளார்.

4. அருணாச்சல கவுண்டர் கடந்த 15.12.1978 தேதியில் 1ம் பிரதிவாதியின் மகளான ஜெயலட்சுமி என்பவர் பெயருக்கு எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் பத்திரத்தில் மேற்படி க.ச.821/3 மற்றும் க.ச.821/2 காலைகளையும் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. தவறுதளாக எண்களை மாற்றி குறிப்பிட்டு விட்டார். 17.09.1980 தேதியில் மேற்படி ஜெயலட்சுமி இரண்டாம் பிரதிவாதி பெயருக்கு எழுதி வைத்துள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்படி க.ச.821/3 மற்றும் க.ச.821/2 காலைகளையும் குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. தவறுகளாக எண்களை மாற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

5. 2ம் பிரதிவாதி வருவாய் ஆவணங்களை சரிபார்க்கும் போது தான் 17.09.1980 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தில் பிழைகள் இருப்பது தெரியவந்தது என்றும், அதனால் அவர்கள் 01.10.1993 தேதியில் பி.வா.சா.ஆ.6 பிழை திருத்தல் பத்திரம் செய்து கொண்டார்கள் என்றும் தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். ஜெயலட்சுமியும், 2ம் பிரதிவாதி பழனியம்மாளும் பிழை திருத்தல் பத்திரம் 17.09.1980 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்திற்காக செய்து கொண்டது போல், அருணாச்சல கவுண்டரின் வாரிசுகளிடம் மேற்படி 15.12.1978 தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ள பிழையை சரி செய்வதற்கு பத்திரம் ஏதேனும் செய்து கொண்டார்களா என்றால் இல்லை.

6. அருணாச்சல கவுண்டர் தாவா சொத்துக்களை ஜெயலட்சுமிக்கு எழுதிக் கொடுக்கவே இல்லை என்றும், மேற்படி சொத்தினை மேற்படி ஜெயலட்சுமி, இரண்டாம் பிரதிவாதி பழனியம்மாளும் சேர்ந்து அபகரிக்க வேண்டும் என்பதற்காக 01.10.1993 தேதியிட்ட பி.வா.சா.ஆ.6 பிழைத்திருத்தல் பத்திரத்தை செய்து கொண்டுள்ளார்கள் என்றால் சரியல்ல. 2004 ஆம் ஆண்டு வரை அருணாச்சல கவுண்டர் பெயரில் தான் பட்டா இருந்துள்ளது என்றால் சரிதான். பழனியம்மாளுக்கு சொத்து எழுதிக் கொடுக்கப்படாததால் தான் பிழைத்திருத்தல் பத்திரம் செய்து கொண்ட பின்னரும் அவர் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

7. அருணாச்சல கவுண்டர் உயிருடன் இருந்த காலம் வரை தாவா சொத்துக்களை அவருடைய தனிப்பட்ட சொத்துக்களாக தான் அனுபவித்து வந்தார் என்றும், அவர் யாருக்கும் எந்த ஆவணமும் எழுதி வைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் மழை பெய்தால் தான் விவசாயம் செய்ய

முடியும் என்றால் சரிதான். தாவா சொத்துக்களை அருணாச்சல கவுண்டரின் வாரிசுகள் தான் ஆடு மாடுகள் மேய்த்தும், மானவரி பயிர் செய்தும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. 2004 ஆம் ஆண்டிற்கு முன்பு பழனியம்மாள் அனுபவித்து வந்தார் நாங்கள் வாங்கிய பின்னர் நாங்கள் அனுபவித்து வருகிறோம்.

8. பழனியம்மாள் 2004 ஆம் ஆண்டு வரை சொத்தினை அவர் மட்டும்தான் அனுபவித்து வந்தார் என்பதை காண்பிப்பதற்கு ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தகப்பனார் உரிமை இல்லாத பழனியம்மாளிடமிருந்து 2004 ஆம் ஆண்டு சொத்தினை வாங்குவதற்கு முயற்சி செய்ததால் தான் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்தார்கள் என்றால் சரியல்ல.

9. 2004 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்த பின்னர் அதனை தெரிந்தும், 26.11.2004 தேதியில் எனது தந்தை தெரிந்தே சொத்தினை வாங்கி உள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலுவையில் இருந்த போது எனது தந்தையார் அவரது செல்வாக்கை பயன்படுத்தி அருணாச்சல கவுண்டர் பெயரில் இருந்த பட்டாவினை அவரது பெயருக்கு மாற்றியுள்ளார் என்றால் சரியல்ல. எனது தகப்பனாருக்கு அவர் பழனியம்மாளிடமிருந்து கிரயம் பெற்ற வகையிலோ, பட்டாவின் படியோ எந்த உரிமையும் அவருக்கு ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

10. அருணாச்சல கவுண்டர் 1978 ஆம் ஆண்டு எழுதிவைத்த செட்டில்மென்ட் ஆவணத்திலும், 1980 ஆம் ஆண்டு பழனியம்மாள் பெயருக்கு ஜெயலட்சுமி எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்திலும் புல எண்கள் தவறுதலாக உள்ளது என்று நான் சொல்வது தவறானது என்றால் சரியல்ல. அருணாச்சல கவுண்டர் உயிருடன் இருக்கும் வரை அவரது அனுபவத்திலும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளின் அனுபவத்திலும் தாவா சொத்துக்கள் இருந்து வருகின்றன என்றால் சரியல்ல.

11. அருணாச்சல கவுண்டருக்கு 2 ஆண் மக்களும் 2 பெண் மக்களும் வாரிசுகள் என்றால் சரிதான். இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ள அருணாச்சல கவுண்டரின் ஒரு மகனான வாதி சுப்பராய கவுண்டருக்கு தாவா சொத்துக்களில் 1/4 பங்கு சேரத்தக்கது என்றும், மற்ற வாரிசுகளுக்கு 3/4 சேரத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல. எனது தகப்பனார் 2004 ஆம் ஆண்டு முதல் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவதாக சொல்வதும், அவரது இறப்பிற்கு பின்னிட்டு அவரது

வாரிசுகளான நாங்கள் சுவாதீனத்திலிருந்து இருப்பதாக சொல்வதும் தவறானது என்றால் சரி இல்லை.

12. தாவா சொத்துக்களைப் பொருத்து எங்களுக்கு இல்லாத உரிமையை இருப்பதாக சொல்லி பொய்யான சங்கதிகள் உடன் பொய்யான எதிர்வாதம் தாக்கல் செய்து வழக்கு நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல.

**6 முதல் 10, 11 முதல் 13, 19 முதல் 22 பிரதிவாதிகள் தரப்பில் வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**14 முதல் 18 பிரதிவாதிகள் தரப்பில் தரப்பினர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் யாரும் முன்னிலை ஆகாததால் அவர்கள் தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகின்றது.**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.09.17 18:10:10 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.